காவிரி விவகாரத்தை திசை திருப்பி – கூட்டணியில் உள்ள கர்நாடகா காங்கிரசை காப்பாற்றவே எம்.பி.க்கள் கூட்டம்!

# தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளரா - த.வெ.க. கட்சியின் தலைமைச் செயலாளரா?

## செய்தியாளர் சந்திப்பில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!



**சென்னை, ஆக.9-**

**காவிரி விவகாரத்தைத் திசை திருப்பி, கூட்டணியில் உள்ள காங்கிரசைக் காப்பாற்றவே இந்த கூட்டம் எனவும், தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளரா? இல்லை த.வெ.க, கட்சியின் தலைமைச் செயலாளரா? எனவும், இந்த அரசை பின்னிருந்து இயக்குவது யார்? எனவும், Fair Delimitation யை காங்கிரஸ், த.வெ.க. உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டனர் எனவும் பேட்டியின் போது கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.**

தொகுதி மறுவரையறை தொடர்பாக கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் த.வெ.க. சார்பில் அதன் பொதுச் செயலாளர் ஆனந்த் கலந்துகொண்டு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திட்டார். அதேபோல தமிழ்நாடு சட்டமன்றத்தில் பா.ஜ.க. தவிர அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொகுதி மறுவரையறை தொடர்பாக தி.மு.க. தான் முதல் கட்சியாக அதனை எதிர்த்துக் குரல் கொடுத்தது. இந்தியா முழுவதிலும் தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படக்கூடிய மாநிலங்களை சேர்ந்த 5 முதலமைச்சர்கள் மற்றும் கட்சித்தலைவர்களை அழைத்து சென்னையில் கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு காங்கிரஸ் முதலமைச்சர்கள் உட்பட சில முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டங்களில் முன்வைக்கப்பட்டது Fair Delimitation என்பது தான். தொகுதி மறுவரையறையை எதிர்க்கவில்லை நியாயமான தொகுதி மறுசீரமைப்பு நடத்த வேண்டும் என்பது தான் அந்தக் கூட்ட ங்களில் எடுக்கப்பட்ட முடிவு. அந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

**தமிழ்நாட்டின் உரிமைதான் முக்கியம்!**

இதை எல்லாம் தாண்டி தேர்தல் நேரத்தில் Delimitation கொண்டு வரப்பட்ட போது கூட அன்றைய முதலமைச்சராக இருந்த எங்கள் தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் உரிமை தான் முக்கியம் என எதிர்ப்பு தெரிவித்தார். அதோடு தேர்தல் நேரத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் டெல்லிக்கு அனுப்பி நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு முதன் முதலாக ஒரு மசோதா தோற்கடிக்கப்பட்டது என்றால் அது தி.மு.க. உட்பட சில கட்சிகள் எதிர்த்த delimitation மசோதா தான். இந்த அளவிற்கு மாநில உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டுள்ள இயக்கம் தி.மு.க. அதேபோல தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது தி.மு.க..

**த.வெக. அரசை பின்னிருந்து இயக்குபவர்கள் யார்?**

கடந்த முறை மசோதா நாடாளுமன்றத்தில் வந்த போது எதெல்லாம் தமிழ்நாட்டை பாதிக்கக் கூடியது என்பதை எடுத்து வைத்தோம். அதற்கு உள்துறை அமைச்சர் வாய் மொழியாக தமிழ்நாடு உட்பட எந்த மாநிலங்களின் பிரதிநித்துவம் பாதிக்கப்படாது என்று கூறிய போதும் அதை மசோதாவிற்குள் சேர்க்க வேண்டும் என சொல்லி அன்றைய மசோதாவிற்கு எதிராக வாக்களித்து தோற்கடித்தோம்.

அடுத்த முறை மசோதா வரப்போகிறது என பரவலாகப் பேசப்படுகிறதே தவிர இன்னும் அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பும் இல்லை. இந்த சூழலில் தற்போது இப்படி ஒரு கூட்டத்தை கூட்டி உள்ளனர் என்றால் இந்த அரசை பின்னிருந்து இயக்குபவர்கள் யார்?

இவர்கள் இன்று நடத்திய கூட்டம் தொடர்பாக முறையாக கட்சி தலைமைக்கு கடிதம் அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் எம்.பி.க்களுக்கு தனித்தனியாக கடிதம் எழுதி உள்ளார் தமிழ்நாடு தலைமைச் செயலாளர். இவர் தமிழ்நாடு அரசின் செயலாளரா இல்லை த.வெ.க. கட்சியின் செயலாளரா?

தற்போது காவிரி நதி நீர் பிரச்சினை, மேகதாது பிரச்சினை, விவசாயிகள் போராட்டம் என இருக்கும் சூழலில், இந்த பிரச்சினைகளில் இருந்து திசை திருப்ப இந்தக் கூட்டம் நடந்துள்ளது. காவிரி பிரச்சினையில் கர்நாடகா காங்கிரசைக் காப்பாற்ற தொகுதி மறுவரையறை கூட்டத்தை கூட்டி உள்ளனர்.

தேர்தலுக்குப் பிறகு முதுகில் குத்தி ஓடியவர்கள் யார் என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். தி.மு.க. எப்போதும் தமிழ்நாட்டின் உரிமையை பாதுகாப்பதில் முதல் ஆளாய் நிற்கும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

---

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் – 5 ஆம் ஆண்டு

# ‘நெய்தல்’ - தூத்துக்குடி கலை விழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! கீதா ஜீவன் – அனிதா ராதாகிருஷ்ணன் – ஜெகன் பெரியசாமி – ஜீ.வி.மார்க்கண்டேயன் – கா.கருணாநிதி பங்கேற்பு!

**தூத்துக்குடி, ஆக.9-**

**கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில், ‘நெய்தல்’ - தூத்துக்குடி கலை விழா நடைபெறுகிறது.**

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுடன் நடைபெறும் இனிய இத்திருவிழா பற்றிய விவரம் வருமாறு:-

கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களி சீரி முன்னெடுப்பில் ‘நெய்தல்’ - தூத்துக்குடி கலை விழா’வின் தொடக்க விழா 14.8.2026 - வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில், தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.




இவ்விழாவிற்கு - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும், முன்னாள் அமைச்சர்கள் பெ.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற கழக உறுப்பினர்கள் விளாத்திகுளம் ஜீ.வி.மார்க்கண்டேயன், கோவில்பட்டி கா.கருணாநிதி ஆகியோரும் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆகஸ்ட் 14 - வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிடும் இந்தக் கலைத் திருவிழா, ஆகஸ்ட் 16- ஞாயிற்றுக்கிழமை அன்று வரை நடைபெறுகிறது. மூன்று நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் பங்கேற்க அனைவர்க்கும் அழைப்பு விடுத்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஓய்ந்திடாத கடல் அலைகளுக்கும், ஓய்வறியாமல் உழைக்கும் மக்களுக்கும் சொந்தமான நம் தூத்துக்குடியில் உங்களின் பேராதரவோடு ஐந்தாம் ஆண்டாக நடைபெறுகிறது.

**“நெய்தல் - தூத்துக்குடி கலை விழா”**

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுடன், நம் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் விளையாட்டுகளுடன், இந்த ஆண்டும் முத்துநகரை கொண்டாட்டத்தில் ஆழ்த்திட வருகிறது நம் நெய்தல்!

நம் மண்ணின் கலைகளோடும் கலைஞர்களோடும் இந்த மக்கள் திருவிழாவைக் கொண்டாடிட, தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், அனைவர்க்கும் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

---

மதுரை – உத்தங்குடியில் இன்று – தி.மு.க. சட்டத்துறை சார்பில்

# தென்மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

*மதுரை, ஆக.9-*

*திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறை சார்பில் தென்மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் நாள் : 09.08.2026, ஞாயிற்றுக்கிழமை, இடம் JFA லக்கி பேலஸ், உத்தங்குடிமதுரை நேரம் : காலை 10.00மணி*

*வரவேற்புரை : மதுரை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.கோகுல்நாத், தலைமை :கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ முன்னாள் எம்.பி., சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் முன்னாள் எம்.எல்.ஏ. சட்டத்துறை இணைச்செயலாளர் S.ராதாகிருஷ்ணன் சட்டத்துறை இணைச்செயலாளர் S.ராஜா முகம்மது தலைமைக்கழக வழக்கறிஞர் A. கலாநிதி தலைமைக்கழக வழக்கறிஞர் S.S.மனோஜ்*

*சிறப்புரை:கழக துணைப் பொதுச்செயலாளர்,நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ. விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம்தென்னரசு நிகழ்ச்சியில் பங்கேற்போர்: கழக துணைப்பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர், ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., விருது நகர் தெற்கு மாவட்ட செயலாளர் K.K.S.S.R.ராமச்சந்திரன் MLA முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி M.L.A முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட செயலாளர் K.R.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி.பி.கீதா ஜீவன்,முன்னாள் அமைச்சர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் முன்னாள் அமைச்சர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் P.மூர்த்தி முன்னாள் அமைச்சர் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் T.மனோதங்கராஜ் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் T. தங்கதமிழ்செல்வன். மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் M.மணிமாறன் M.L.A.*

*திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் .I.P.செந்தில்குமார்.M.A.*

*இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர்பாட்சா(எ) முத்துராமலிங்கம்.L.*

*திருநெல்வேலி மத்திய மாவட்ட செயலாளர் மு.அப்துல்வஹாப்MLA/ தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் இ.ராஜா BLA தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் N.ராமக்கிருஷ்ணன் B.M மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி ML,A கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் R.மகேஷ் திருநெல்வேலி ‘கிழக்கு மாவட்ட செயலாளர் M.கிரஹாம்பெல் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் V.ஜெயபாலன்*

*நன்றியுரை : திருநெல்வேலி ‘கிழக்கு மாவட்ட செயலாளர்*

*மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் J. S.சிவனேசன்.*



திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி பூவிருந்தவல்லி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி வழிகாட்டுதலின்படி கலைஞரின் திருவுருவ படத்திற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். ஜெயசீலன் தலைமையில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் உள்பட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், 32 வார்டு, கடப்பேரி பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் முத்தமிழ் அறிஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் வட்டக் கழகச் செயலாளர் இ.கமலகண்ணன், வட்டக் கழக நிர்வாகிகள் ஏழுமலை, இளையராஜா, இன்பராஜ், கார்த்திக், முத்து, விஸ்வநாதன், வினோத்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

---



சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

# உடன்பிறப்புகளிடம் உரையாடிய முரசொலி!

முரசொலியை துண்டறிக்கை போல தொடங்கி, வார ஏடாக நடத்தி, பின்னர் நாளிதழாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். வணிகரீதியாகத் தொடங்கப்படும் பத்திரிகைகளுக்கான கட்டமைப்புகள் எந்தளவிற்கு இருக்க வேண்டுமோ, அதே அளவுக்கு கட்சியின் பத்திரிகையான முரசொலிக்கும் சிறப்பான கட்டமைப்புகளைக் கலைஞர் உருவாக்கியிருந்தார். அச்சகம், விநியோகம், விளம்பரம், சந்தா போன்ற அனைத்திலும் முரசொலி முன்னணியில் இருந்ததால், சிறிய ஊர்களில் உள்ள கடைகளில்கூட முரசொலியை வாங்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியிருந்தார்.

கட்டமைப்பை எந்த அளவிற்குப் பலப்படுத்தினாரோ அதே அளவுக்கு முரசொலி செய்திகளின் உள்ளடக்கமும் வலிமையாக இருக்கும். சின்னச் சின்ன பெட்டிச் செய்திகள் கூட பெரும் தாக்கத்தை அரசியல் களத்தில் ஏற்படுத்தும். கார்ட்டூன்கள் இந்தியாவை ஆண்டவர்களையே அசைத்துப் பார்த்திருக்கிறது. கேள்வி – பதில், நாடாளுமன்ற - சட்டமன்றப் பேச்சுகள், மாநாட்டு உரைகள் என்று முரசொலி வெளியிடும் செய்திகள் அனைத்தும், தொண்டர்களுக்கு உணர்வை ஊட்டக்கூடியவை. அதில், மிக முக்கியமானது கலைஞர் எழுதும் உடன்பிறப்புக் கடிதம்.

ஆட்சியில் இருந்தால் திட்டங்களையும் சாதனைகளையும், அரசாங்கத்தின் செய்திமக்கள் தொடர்புத் துறையைவிட பரவலான அளவில் முரசொலியில் வெளியாகும் கலைஞரின் கடிதம் கொண்டு சேர்க்கும். எதிர்க்கட்சியாக இருந்தால், கழகத்தின் செயல்பாடுகள், முக்கியமான முடிவுகள், அவற்றைச் செயல்படுத்த வேண்டிய விதம் என்று தொண்டர்களைச் சோர்வில்லாமல் செயல்பட வைக்கும் ஆற்றலுடன் கலைஞரின் ‘உடன்பிறப்புக் கடிதங்கள்’ இருக்கும். 2001 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, கலைஞர் தொடர்ச்சியாக எழுதிய கடிதங்களில், 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் துறை வாரியாக ஒவ்வொரு கடிதத்திலும் எழுதினார்.

2007ல் நெல்லையில் தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு நடைபெற்றதையொட்டி, தமிழ்நாடு முதல் உலகளாவிய அளவில் சாதனை படைத்த இளம் தலைவர்களின் வரலாற்றை இளைஞரணியினருக்கு கடிதம் மூலமாகக் கலைஞர் எடுத்துரைத்தார். கலைஞர் எழுதும் கடிதங்கள், உடன்பிறப்புகளுடன் உரையாடுவது போல இருக்கும். தன்னுடைய கருத்தைச் சொல்லி, தொண்டர்களின் உணர்வு என்ன என்பதைக் கடிதங்கள் வாயிலாகவே கண்டறிந்தவர் கலைஞர்.

**அவதூறுகளையும் துரோகங்களையும் வாழ்க்கை முழுவதும் எதிர்கொண்டவர் கலைஞர். மனம் கலங்காமல் அவரது பயணம் தொடர்ந்தது. அது பற்றி உடன்பிறப்புகளுக்கு இப்படி எழுதுகிறார்.**

**“முழுமையாக ஒரு நாள், இதயத்தை இடரும் எந்தச் செய்திகளும் இல்லை. எனவே இன்று நிம்மதி” என்று அமைதியாக ஒரு சேர இரவும் பகலும் இணைந்து கழிந்ததே கிடையாது. அப்படியொரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட எனக்கு, பாலைவனத்தில் நடந்தால் பாதம் கொப்பளிக்கும் என்பது கூடவா தெரியாது? ஆனால், எனக்குப் பாதம் மட்டும் கொப்பளிக்கவில்லை. இதயமே கொந்தளித்தது. அதற்கு எந்த மருத்துவரும் தரமுடியாத மருந்தாக என் கையில் இருப்பதுதான் எழுத்து.**

**“அம்மவோ.. வீண் பழி சுமத்துகிறார்களே!” என்று உள்ளம் கதறி அழும். உடனே எழுத உட்காருவேன். எழுதியதைப் படிப்பேன். என் எழுத்துகள் என் கண்ணீரைத் துடைத்துவிட்டு, என் தோளைத் தட்டும். துயரம் பறக்கும். அவரா? நம்பமுடியவில்லையே.. இப்படியொரு துரோகம் செய்துவிட்டாரே.. நன்றி என்ற சொல்லுக்கே நாட்டில் இடமில்லையா? ஏங்கும் நெஞ்சம். வீங்கும் விழிகள். ஆறுதல்கூற எழுதுகோல் ஓடி வரும். எழுதும். எழுந்துகொள்வேன் நான்.**

**சினம் பொங்குமளவுக்குச் சிறியோர்தம் இழிமொழி, பழிமொழி கிளம்பும். பகை நாணும் படைக்கலன்களாய் எழுத்துகள் பின்னே அணிவகுக்கும். எழுதிப் படிப்பேன். புழுதியெனக் காற்றில் மறையும் பகைப்புலம்.**

கலைஞரின் எழுத்துகள் அவருக்கு மட்டுமல்ல, அவருடைய உடன்பிறப்புகள் அத்தனை பேரின் மனதிற்கும் மருந்து. உடன்பிறப்புகளுடன் உரையாடிய கலைஞரின் கடிதங்கள் அவர் வாழ்ந்த காலத்தில் பத்து தொகுதிகளாக வெளிவந்தன. கலைஞரின் மறைவுக்குப் பின் 54 தொகுதிகளாக ‘கௌரா பதிப்பகம்’ வெளியிட்டது.



முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு, 78அ வட்டத்தில் வட்டச் செயலாளர் ந.பாலு தலைமையில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், நியமனக் குழு உறுப்பினர் சொ.வேலு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி அறுசுவை உணவு வழங்கினார்.இதில் மு. முரளிதரன்,எஸ். நாராயணன்,என். மனோகரன்,வி.மோகன்,வி. ஜான்சி,எஸ்.ராஜேந்திரன்,சி. குணசேகரன்,எஸ். தமிழ்ச்செல்வன், பன்னீர்செல்வம்,எம்.பாலாஜி,எம். மதிவாணன்,ஆர்.ராஜ்குமார்,எம். நித்யா,எம். சங்கர், ஆர். புருஷோத்தமன்,எம்.சீனிவாசன், பிரேம்குமார்,ரீட்டா, பி.சந்திரசேகர், கோவிந்தம்மாள்,ஆர். சீனிவாசன், கோபி,எம்.எல்.மனோகரன், சிவலிங்கம்,பிரேம்குமார், சிவகுமார்,மனோஜ், எஸ். மனோகரன்,சி.பாலா,சி. பொன்னம்பலம்,சந்தோஷ் மணி, ஜானகிராமன்,பன்னீர்செல்வம், கலியபெருமாள்,ராமு,லோகு,சத்யா, சந்திரசேகர்,பி.சேகர் உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.